தொகுப்பு இல. 24 இதழ். 1

தை 2026

INFORMATION

கொழும்பு இறையியல் கல்லூரியின் செய்திமடல்

## அதிபரின் சிந்தனையிலிருந்து

# காத்திருக்கும்படியாக கூறும் கடவுளின் அழைப்பு



**ஐவோ பூபாலன், PhD**
அதிபர்

### லூக்கா 2:25-35 குறித்த ஒரு தியானம்

ஒரு எல்லையிலிருந்து மறுஎல்லை வரையான நீண்ட தூர மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில், பாதையின் ஆங்காங்கே நிற்கும் ஓட்டப்பந்தயத்திற்கான நடுநிலையாளர்கள் மிக முக்கியமானவர்கள். ஓட்டப்பந்தய வீரர்கள் தனிமையில் கரடுமுரடான, எவரையும் காணாத இடங்களை தாண்டி பாதைகளில் ஓடி சோர்ந்து போகும்போது, ஒரு திருப்பத்தில் நடுநிலையாளரை கண்டதும் புத்துயிர் பெறுகிறார்கள். தாங்கள் சரியான பாதையில்தான் செல்கிறோம் என்ற உறுதியையும், மேற்கொண்டு செல்ல வேண்டிய திசை குறித்த தகவலையும் அந்த நடுநிலையாளர் அவர்களுக்கு அளிக்கிறார். ஆனால் அந்த நடுநிலையாளருக்கோ, வீரர்களை கவனிப்பதையும் காத்திருப்பதையும் தவிர வேறெதுவும் செய்வதற்கு இருப்பதில்லை.

மேசியாவின் தாயாக 'மரியாள்' மேற்கொண்ட மாரத்தான் என்ற நெடிய வாழ்க்கை பயணத்தில், அவளுக்கு உறுதியளிக்கவும் வழிநடத்தவும் கடவுள் சில நடுநிலையாளர்களை நியமித்திருந்தார். அவர்களில் ஒருவர்தான் சிமியோன். பாபிலோனியர்கள் எருசலேமை சூறையாடிய காலம் முதல், சுமார் அறுநூறு ஆண்டுகளாக தனது தேசத்திற்கு மறுக்கப்பட்ட "இஸ்ரவேலுக்கு ஆறுதல் வர" அவர் மிகுந்த பாரத்தோடு காத்திருந்தார். தங்களுக்கு நேர்ந்த அரசியல் அவலங்களுக்கு சதித்திட்டங்கள் மூலமாகவோ அல்லது சமரசங்கள் மூலமாகவோ தீர்வு காண முயன்ற பலரை போலல்லாமல், சிமியோன் அத்தகைய தன்னிச்சையான வழிகளை மறுத்துவிட்டார். அவர் நீதியுள்ளவராகவும், பக்தியுள்ளவராகவும், ஆவிக்குரிய ஆழம் கொண்டவராகவும் இருந்தார். கூறப்போனால், லூக்கா சிமியோனின் ஆவிக்குரிய தன்மையை மூன்று முறை குறிப்பிடுகிறார்: அவனோடு பரிசுத்தாவியானவர் இருந்தார் (வச. 25), பரிசுத்த ஆவியினாலே அறிவுறுத்தப்பட்டான் (வச. 26), மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார் (வச. 27).

எதையாவது செய்து கொண்டிருப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இந்த நவீன யுகத்தில், "மேசியாவை காணும்வரை" எதையும் செய்யாமல் காத்திரு என்ற சிமியோனின் ஆவிக்குரிய அழைப்பு ஒரு விசித்திரமான பணியாக தோன்றலாம். அவர் மிக நீண்ட காலம் காத்திருந்ததால், அந்த அழைப்பு ஒரு அடிமையின் சங்கிலியைப்போல அவரை பிணைத்திருப்பதாக உணர்ந்தாலும் (வச.29), ஒருநாள் "பெற்றோர் குழந்தை இயேசுவை கொண்டு வரும் வரை" (வச.27) சிமியோன் பொறுமையோடும் விசுவாசத்தோடும் காத்திருந்தார். இறுதியில் அவரது விசேட அழைப்பானது நிறைவேறுகிற தருணம் வந்தது: "ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர் . . . ஏனெனில், உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது."

சிமியோன், மரியாளுக்கு ஊக்கமளிக்கும் மற்றும் வழிநடத்தும் வல்லமையான வார்த்தைகளை கூறியதன் பின்பதாக (வச.34-35), வேதாகமத்தின் பக்கங்களிலிருந்து விடைபெறுகிறார். ஆனாலும், விடைபெறுவதற்கு முன்பதாக அவர், கடவுளினுடைய மகத்தான இரட்சிப்பின் திட்டத்தில், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அழைப்பு உண்டு என்ற உண்மையை நமக்கு உணர்த்தி செல்கிறார்.

1755-ஆம் ஆண்டு ஜோன் வெஸ்லி "உடன்படிக்கை ஆராதனை" என்ற வழிபாட்டு முறையை உருவாக்கினார். ஒவ்வொரு ஆண்டின் முதல் ஞாயிற்றுக்கிழமையும் நடத்தப்படும் இவ்வழிபாட்டு முறையானது, கடவுளினுடைய மக்கள் இயேசு கிறிஸ்துவுடனான உறவை அங்கீகரிக்கவும், புதுப்பித்துக்கொள்ளவும், அதன் மூலம் தங்களது சீஷத்துவத்தை உறுதிப்படுத்தவும் உதவியது. ஆண்டுதோறும் நடைபெறும் இந்த உடன்படிக்கையில் தங்களை மீண்டும் அர்ப்பணித்தலின் மூலமாக, இன்றுவரை பல தலைமுறை கிறிஸ்தவர்கள் குறிப்பாக, அர்ப்பணிப்பு ஜெபத்தின் மூலம் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகின்றனர்.

> "நான் இனி எனக்குரியவன் அல்ல, உமக்குரியவன். உம் விருப்பப்படி என்னை நடத்தும், யாரோடு வேண்டுமானாலும் என்னை வரிசைப்படுத்தும். என்னை உமது பணிகளில் ஈடுபடுத்தும், அல்லது உமக்காக துன்பங்களை சகிக்க செய்யும். உமக்காக நான் பயன்படுத்தப்படட்டும் அல்லது உமக்காக நான் வேறு பிரிக்கப்படட்டும். உமக்காக நான் உயர்த்தப்படட்டும் அல்லது உமக்காக நான் தாழ்த்தப்படட்டும். நான் நிறைந்திருக்கட்டும் அல்லது வெறுமையில் வாடட்டும். எல்லாவற்றையும் நான் பெற்றிருக்கட்டும் அல்லது எதுவுமில்லாமல் போகட்டும். எல்லாவற்றையும் உமது விருப்பத்திற்கும் ஆளுகைக்கும் முழுமனதுடன் அர்ப்பணிக்கிறேன்."

இரட்சகரை தன் கருவில் சுமப்பதற்கும், அவரோடு சிலுவை வரை பயணம் செய்வதற்குமான மாரத்தான் அழைப்பு மரியாளுக்கு இருந்தது. ஆனால், சிமியோனுக்கோ வித்தியாசமான அழைப்பு இருந்தது. அது கடவுளினுடைய வாக்குத்தத்தத்தை நம்பி காத்திருந்து, இரட்சகரை கருவில் சுமந்து வருபவளை உற்சாகப்படுத்தி வழி அனுப்பி வைப்பதாகும்.

> "வெறுமனே அமைதியாக இருந்து காத்திருப்பவர்களும்கூட கடவுளினுடைய பணி செய்பவர்களே" (ஜோன் மில்டன்)

## வேதாகம வார்த்தையில் வேரூன்றுவதற்கான ஓர் அழைப்பு



2026-ம் ஆண்டிற்கான பாடநெறி வழிகாட்டியின் அட்டைப்படமானது, ஒரு கடும் புயலில் சிக்கினாலும் அம்மரமானது வேதாகம வசனத்தில் ஆழமான வேரூன்றி இருப்பதால் அசைக்கப்படாமல் நிலைத்து நிற்பதை சித்தரிக்கிறது. நீங்கள் இதனை உற்று நோக்கினால், அப்படத்திலுள்ள வேதாகம வசனங்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் இருப்பதை காணலாம். இது கொழும்பு இறையியல் கல்லூரியின் பன்மொழி தன்மையினை பிரதிபலிக்கிறது. விசுவாசிகள் தமது விசுவாசத்தில் மென்மேலும் வளரவும், வேதாகம வசனத்தில் தமது வேர்களை ஆழமாக ஊன்றுவதற்கும் இவ்வடிவமைப்பானது ஓர் அழைப்பு விடுக்கிறது. அப்போதுதான் வாழ்வில் ஏற்படும் புயல்களை எதிர்த்து மனவுறுதியுடன் நிலைத்திருக்க இயலும்.

ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளிலான 2026 பாடநெறி வழிகாட்டிகளை பார்வையிடுவதற்கு அல்லது தரவிறக்கம் செய்வதற்கு cts.lk என்ற எமது இணையத்தளத்தை நாடவும்.

## இந்த இதழில்.....


நைசியா விசுவாசப்பிரமாணம் ஆய்வரங்கு – பக்கம் 2

இறையியல் கல்வி கொழும்பு முழுவதிலும் உள்ள விசுவாசிகளிடத்தில் எளிதில் சென்றடைவதற்கு கொழும்பு இறையியல் கல்லூரி வழிவகுத்துள்ளது – பக்கம் 3

கல்விப்பீட செய்திகள் - பக் 4

“நம்பிக்கையை மீட்டெடுத்தல்” வலையொளி தொடர் - பக்கம் 5

தலைவர்களை பயிற்றுவிப்பதற்கு கொழும்பு இறையியல் கல்லூரியுடன் பங்காற்றல் - பக்கம் 6


### ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாச ஆய்வரங்கு

## இன்றைய இலங்கையிலுள்ள திருச்சபைகளுக்கு நைசிய விசுவாசப்பிரமாணத்தின் பொருத்தப்பாடு

இலங்கையிலுள்ள சமகால திருச்சபைகளுக்கு நைசிய விசுவாசப்பிரமாணத்தின் பொருத்தப்பாடு மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடுவதற்காக, திருச்சபை பிரிவுகளின் பிரதானிகள், திருச்சபை தலைவர்கள், இறையியலாளர்கள் மற்றும் இறையியல் மாணவர்கள் என பல தரப்பினரும் 2025 ஐப்பசி, 31 அன்று ஒன்றுகூடினர்.

இந்நிகழ்வில் இந்தியாவின் தெற்காசிய உயர்தர கிறிஸ்தவக்கல்வி நிறுவனத்தின் (SAIACS) முதல்வரான முனைவர். ஜோண் வர்க்கீஸ் முதன்மை பேச்சாளராக கலந்துகொண்டார்.




“நைசிய விசுவாசப்பிரமாணம்: கடவுளின் மூவொரு வாழ்வின் இரகசியம்” எனும் தலைப்பிலான முதன்மை உரைக்கு, கல்கிசை புனித தோமா பாடசாலையின் பொறுப்பமைக்குருவானவரும், நுகேகொடை புனித மரியாள் மற்றும் புனித யோவான் திருச்சபையின் முகாமை குருவானவருமான அதி.வண. சாமுவேல் பொன்னையா பதிலுரை வழங்கினார்.



தொடர்ந்து, “நைசியா விசுவாசப்பிரமாணமும் இன்றைய திருச்சபையும்” எனும் இரண்டாவது முதன்மை உரைக்கு, ஆசீர்வதிக்கப்பட்ட சாக்கிரமந்துகளின் திருச்சபை (SSS), கிறிஸ்துவே வாழ்வின் அப்பம் மாகாணத்தின் (The Province of Christ the Bread of Life) மாகாண தலைவரான அருட்தந்தை ஜஸ்டின் சவ்கான் பதிலுரை வழங்கினார்.



மேலும், திருச்சபையின் வாழ்விலும் வழிபாட்டிலும் நைசிய விசுவாசப்பிரமாணத்தின் தாக்கம், இறையியல் ரீதியான தவறான திசைதிருப்பங்களிலிருந்து விசுவாசத்தை பாதுகாத்தல் போன்ற தலைப்புகளில் விரிவான செயலமர்வுகள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடைபெற்றன. இதனை கொழும்பு இறையியல் கல்லூரியின் விரிவுரையாளர்களும், இலங்கை இறையியல் கல்லூரியின் அப்போதைய முதல்வருமான அருட்திரு நடராஜா அருள்நாதன் ஆகியோர் வழிநடத்தினர்.













திருச்சபைகளின் ஒருமைப்பாட்டின் முதலாவது நைசிய பொதுச்சங்கத்தின் 1700-வது ஆண்டு நிறைவை கொண்டாடும் விதமாக இலங்கை மன்ற கல்லூரியில் (SLFI) நடைபெற்ற இந்த ஆய்வரங்கானது இலங்கையிலுள்ள பல்வேறு திருச்சபைகளும் ஒன்றிணைந்த ஒரு சிறப்பான சங்கமமாக அமைந்தது.







மேலும் வாசிப்பதற்கு இங்கே அழுத்தவும்.

## இறையியல் கல்வி கொழும்பு முழுவதிலுமுள்ள விசுவாசிகளிடத்தில் எளிதில் சென்றடைவதற்கு கொழும்பு இறையியல் கல்லூரி வழிவகுத்துள்ளது

முதல் முறையாக வட கொழும்பு கல்வி நிலையத்தில் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன


"சீஷத்துவம்"– முனைவர். சனத் அத்துகோரள (சிங்களம்)


"புதிய ஏற்பாட்டு ஆய்வு" – வண. ரோவில் ப்ளொம் (ஆங்கிலம்)





சிற்றுண்டி ஐக்கியவேளை

வட கொழும்பு கல்வி நிலையத்தில் கடந்த புரட்டாசி முதல் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் பாடநெறிகளை கற்பிப்பதற்கு ஆரம்பித்ததன் மூலமாக கொழும்பு இறையியல் கல்லூரியானது ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது. கடந்த 13 ஆண்டுகளாக சுற்றியுள்ள திருச்சபை சமூகத்திற்கு தமிழ் மொழியில் மட்டுமே பாடநெறிகளை வழங்கி வந்த இக்கல்வி நிலையமானது தற்போது, மாணவர்களுக்கு கூடுதல் இடவசதி மற்றும் சிறந்த வசதிகளை வழங்கும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. இது தற்போது மும்மொழியிலான கல்வி நிலையமாகவும், நூலகமாகவும் செயல்படுகிறது.

புறக்கோட்டை, டேம் வீதியின் பரபரப்பான சூழலுக்கு மத்தியில், மெதடிஸ்ட் சிட்டி மிஷன் கட்டிடத்தின் மேல் தளத்தில் அமைந்துள்ள இக்கல்வி நிலையமானது, அலுவலக வேலை முடிந்து செல்பவர்களுக்கும் அப்பகுதியில் வசிப்பவர்களுக்கும் மிகவும் வசதியான இடத்தில் அமைந்துள்ளது.

வண. ரோவில் ப்ளொமினால் (Rev Roville Blom) நடத்தப்பட்ட முதலாவது ஆங்கில மொழிப்பாடநெறியில் இணைந்த ஒரு புதிய மாணவியொருவர், தனது ஒவ்வொரு கேள்விக்கும் சூழலோடும் ஆதாரத்தோடும் விரிவான பதில்கள் கிடைத்ததுடன், அது வேதாகமத்தை ஆழமாக புரிந்துகொள்வதற்கு உதவியதாகவும் கூறினார். அவர் தனது கருத்தில் "எனது இளமாணி மற்றும் முதுமாணி பாடத்திட்டங்களின் கீழ் எண்ணற்ற விரிவுரைகளில் நான் கலந்துகொண்டிருந்தபோதிலும், இது போன்ற ஒரு அனுபவத்தை நான் பெற்றதில்லை. இது வெறும் ஒரு விரிவுரை மட்டுமல்ல, தனிப்பட்ட ரீதியில் என் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இது என்னுள் ஒரு பயபக்தியை ஏற்படுத்தியதுடன், கிறிஸ்துவின் மீது மிகுந்த அன்பு கொண்ட ஒரு நபராக மாற என்னை தூண்டியது" என்று பகிர்ந்துகொண்டார்.

வண. முனைவர். சனத் அத்துகோரளவினால் "சீஷத்துவம்" பாடநெறியினை சிங்கள மொழியில் நடத்தினார். அதில் கலந்துகொண்ட ஒரு போதகர் கருத்து தெரிவிக்கையில்: "சீஷத்துவத்தை குறித்து, அதாவது சீஷன் என்பவர் யார், சீஷர்களை உருவாக்குவதன் முக்கியத்துவம், தற்போதைய திருச்சபை சூழலில் அதை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் நாம் கற்றுக்கொண்டவற்றை நடைமுறையில் எவ்வாறு செயல்படுத்துவது போன்றவற்றை நாங்கள் தெளிவாகவும் முறையாகவும் கற்றுக்கொண்டோம்." என்றார்.

வட கொழும்பு கல்வி நிலையத்தில் மூன்று மொழிகளிலும் புத்தகங்களை கொண்ட வளர்ந்து வரும் நூலகம் ஒன்றும் உள்ளது. இதில் அனைத்து திருச்சபை உறுப்பினர்களும் இணைந்து பயன்பெறலாம்.

## கொழும்பு இறையியல் கல்லூரியின் உலக திருப்பணிகளுக்கான ஜெப வாரம்











கார்த்திகை மாதம் நடைபெற்ற வருடாந்த உலக திருப்பணிகளுக்கான ஜெப வாரமானது, இன்னுமாக நற்செய்தி சென்றடையாத மக்களுக்காகவும், உலகெங்கும் துன்பங்களை எதிர்கொள்ளும் சகோதர, சகோதரிகளுக்காகவும் ஜெபிக்கும் வாய்ப்பினை கொழும்பு இறையியல் கல்லூரி சமூகத்திற்கு ஏற்படுத்தி கொடுத்தது.

மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "ஜெப நடைப்பயணமானது" இதில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். கல்விப்பீட உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுடன் இணைந்து, மாணவர்கள் பிரதான வளாகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் நடைப்பயணத்தினை மேற்கொண்டு, நற்செய்தி பரவவும், மக்களின் இருதயங்கள் நற்செய்திக்காக திறக்கப்படவும் ஜெபித்தனர். இதனை தொடர்ந்து, கொத்துரொட்டி உணவுடன் ஐக்கியவேளையை கொண்டாடினர்!

### ஜெபக் குறிப்புகள் . . .

மாணவர்கள்: 2027-ம் ஆண்டு பட்டப்படிப்பை நிறைவு செய்யவிருக்கும் மாணவர்கள், தங்களுடைய பாடங்களையும், செய்முறை பயிற்சிகளையும் வெற்றிகரமாக நிறைவு செய்யவும், முழு ஈடுபாட்டுடன் தங்களது ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்கவும் கடவுள் அவர்களுக்கு உதவ வேண்டுமென ஜெபியுங்கள்.

புதிய மாணவர்கள்: கடவுளுடைய வார்த்தையை முறையாக தொடர்ந்து படிப்பதில் அதிக ஆர்வம் கொள்ளவும், தங்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் அனுபவத்தைப் பெறவும் ஜெபியுங்கள்.

இலங்கையிலுள்ள திருச்சபைகள்: திருச்சபைக்குள் ஒற்றுமையும் எழுப்புதலும் ஏற்படுவதற்கு ஜெபியுங்கள். கடவுள் தமது மக்களை வழிநடத்தவும், கடவுள் பயமுள்ள முதிர்ச்சியடைந்த தலைவர்களை உருவாக்கவும் வேண்டுமென ஜெபியுங்கள்.

## கல்விப்பீட செய்திகள்

## உலகளாவிய திருச்சபை அரங்கில் இலங்கையின் பிரதிநிதித்துவம்



முனைவர். மனோ இம்மானுவேல், 2025 ஐப்பசியில் எகிப்தின் அலெக்ஸாண்ட்ரியாவுக்கு அருகிலுள்ள வாடி எல் நத்ருனில் உள்ள புனித பிஷோய் மடாலயத்தில் நடைபெற்ற, விசுவாசம் மற்றும் ஒழுங்கு குறித்த உலகளாவிய திருச்சபைகள் மன்றத்தின் 6-வது உலக மாநாட்டில் கலந்து கொண்டார். இம்மாநாடு "புலப்படக்கூடிய ஐக்கியமானது இப்போது எங்கே?" (Where now for visible unity?) என்ற கருப்பொருளில் நடைபெற்றது.

மாநாட்டின் இறுதி நாளில் நடைபெற்ற அமர்வில், பல்வேறு பிராந்தியங்களை சேர்ந்த இறையியலாளர்களுடன் இணைந்து "புலப்படக்கூடிய ஐக்கியத்துடன் வாழ்தல்" (Living Visible Unity) என்ற தலைப்பில் அவர் உரையாற்றியிருந்தார்.






திரு.நத்தானியேல் சோமநாதன் 2025 கார்த்திகையில், எகிப்தின் லோகோஸ் பாப்பல் மையத்தில் நடைபெற்ற "லொசான் மரபுவழி முன்முயற்சி" (Lausanne Orthodox Initiative) நிகழ்வில் பங்கேற்றார்.

"தெற்காசிய சுவிசேஷகர்கள் மற்றும் பெந்தெகொஸ்தே சபையினர் நைசிய விசுவாசப்பிரமாணத்தை புதிய கோணத்தில் அணுகுதல்" என்ற தலைப்பில் உரையாற்றுவதற்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார். மரபுவழி கிறிஸ்தவர்களுக்கும் சுவிசேஷகர்களுக்கும் இடையிலான ஆக்கபூர்வமான சந்திப்புக்கு அப்பாற்பட்டு, கொப்டிக் ஆன்மீகத்தின் (Coptic spirituality) மண்ணில் இருந்த அந்த அனுபவமானது தமக்கு மிகவும் ஆழமானது என்று அவர் குறிப்பிடுகிறார்.






முனைவர். ஐவோ பூபாலன், 2025 ஆவணியில், நடைபெற்ற ஆசிய இறையியல் சங்கத்தின் (Asia Theological Association) பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொண்டார். தைபேயில் நடைபெற்ற இக்கூட்டமானது, "சீர்குலைந்த உலகில் கிறிஸ்துவிற்கொப்பான தலைமைத்துவ உருவாக்கம்" (Christ-like Leadership Formation for our Turbulent World) என்ற கருப்பொருளில் நடைபெற்றது.





வண. ரவீன் கல்தேரா, ஐப்பசியில் தாய்லாந்தின் சியாங் மாயில் நடைபெற்ற சீர்திருத்தப்பட்ட திருச்சபைகளின் உலகக்கூட்டமைப்பின் ( WCRC ) 27-வது பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்றார். இக்கூட்டமானது "உமது சாட்சியில் உறுதியாக நிலைத்திருங்கள்" (Persevere in your witness) என்ற கருப்பொருளில் நடைபெற்றது.



முனைவர். சனத் அத்துகோரள, 2025 ஐப்பசியில், தென் கொரியாவில் நடைபெற்ற உலக சுவிசேஷ கூட்டணியின் (World Evangelical Alliance) பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்நிகழ்வில், உலகெங்கிலும் உள்ள சுவிசேஷ தலைவர்கள் மற்றும் தேசிய கூட்டணிகளின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து, "2033-க்குள் அனைவருக்கும் நற்செய்தி" (The Gospel for Everyone by 2033) என்ற கருப்பொருளின் கீழ் பங்கேற்றனர்.



# மனமார்ந்த வாழ்த்துகள்!

## பேராசிரியர் அன்பழகன் அரியதுரைக்கு 2025-ன் AAOU சிறந்த சேவைக்கான விருது வழங்கப்பட்டது




கொழும்பு இறையியல் கல்லூரியின் செயற்குழு உறுப்பினரான பேராசிரியர் அன்பழகன் அரியதுரைக்கு ஆசிய திறந்தநிலை பல்கலைக்கழகங்களின் சங்கத்தின் 2025-ன் சிறந்த சேவைக்கான விருது வழங்கப்பட்டது.

1997 ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஒருவருக்கு மட்டுமே வழங்கப்படும் இந்த உயரிய விருதானது, திறந்தநிலை மற்றும் தொலைதூர கல்வித்துறையின் முன்னேற்றத்திற்காக ஆற்றப்பட்ட அளப்பரிய மற்றும் அர்ப்பணிப்புள்ள சேவையை பாராட்டி வழங்கப்படுகிறது. இவ்விருதின் 29 ஆண்டுகால வரலாற்றில், இலங்கையிலிருந்தும் இலங்கை திறந்தநிலை பல்கலைக்கழகத்திலிருந்தும் இந்த விருதை பெறும் முதல் நபர் பேராசிரியர் அன்பழகன் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## காட்ப்ரே யோகராஜா WEA சர்வதேச சபையின் தலைவராக நியமனம்

கொழும்பு இறையியல் கல்லூரியின் ஸ்தாபக செயற்குழு உறுப்பினரான திரு. காட்ப்ரே யோகராஜா, 2025 ஐப்பசியில் கொரியாவின் சியோலில் நடைபெற்ற உலக சுவிசேஷ கூட்டணியின் (WEA) பொதுச்சபை கூட்டத்தில் அதன் சர்வதேச சபை தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவர் ஆசிய சுவிசேஷ கூட்டணியின் தலைவராகவும், இலங்கையின் தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணியின் (NCEASL) பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றி வருகிறார்.




## கொழும்பு இறையியல் கல்லூரியின் தலைமையகத்தின் வருகைதரு விரிவுரையாளர்கள்

### முனைவர் தபியா பைண்டர்



எஸ்றா – நெகேமியா - எஸ்தர்: சவாலான காலங்களில் இத்தலைவர்கள் எவ்வாறு துணிவோடும். நம்பிக்கையோடும் செயல்பட்டார்கள் என்பது பற்றிய பாடமாகும்.
ஏசாயா: ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தின் வரலாற்று பின்னணி, ஆசிரியர், முக்கிய கருத்துக்கள் மற்றும் அதன் செய்தியை இன்றைய காலத்திற்கு எவ்வாறு எவ்வாறு நடைமுறைபடுத்துவது என்பது பற்றிய ஆய்வு.
கிறிஸ்தவ கல்வியாளரை உருவாக்குதல்: இது ஒரு முதுமாணி பாடநெறியாகும். மாணவர்கள் கல்வி மற்றும் தலைமைத்துவத்தில் சிறந்த திறன்களை பெறுவதற்கு இது உதவுகிறது.

### முனைவர் ஹவிலா தர்மராஜ்



'1 மற்றும் 2 இராஜாக்கள்'

கடவுள் தமது மக்களாகிய இஸ்ரவேலர்களுடன் கொண்டிருந்த உறவின் மூலம், மாணவர்கள் கடவுளையும், அவரது உலகத்தையும் ஆழமாக புரிந்துகொள்ளும் வாய்ப்பையும், இதன் மூலம் இயேசுவின் உண்மையான சீஷர்களாக வாழ்வது எப்படி என்பதையும் முதுமாணி பாடத்திட்ட மாணவர்கள் கற்றுக்கொண்டனர்.

### முனைவர் டேவிட் சி. குட்வின்



'மனித விருத்திக்கான ஓர் அறிமுகம்'

மனித விருத்தியின் பல்வேறு நிலைகள் ஒருவரின் ஆவிக்குரிய வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும், விசுவாசப்பயணத்தில் ஒருவருக்கு எவ்வாறு திறம்பட வழிகாட்டுவது என்பதையும் மாணவர்கள் இதில் கற்றுக்கொண்டனர்.


## நம்பிக்கையை மீட்டெடுத்தல்


நடைமுறை வழிகாட்டல் | ஊக்கம் | வேதாகம சத்தியம்


நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவது குறித்த ஒரு சிறப்பு நேர்காணல் தொடரை கொழும்பு இறையியல் கல்லூரி தயாரித்துள்ளது. ஆளுமை வகைகளை புரிந்துகொள்வது, ஆரோக்கியமான உறவுகளை மேம்படுத்துவது மற்றும் உடல் உள காயங்களின் தாக்கத்தை புரிந்துகொண்டு அதிலிருந்து எவ்வாறு மீள்வது போன்ற தலைப்புகளில் கல்விப்பீட உறுப்பினர்களும் பழைய மாணவர்களும் கலந்துரையாடும் காணொளிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

காணொளிகளை காண்பதற்கு இங்கே அழுத்தவும்

YouTube



# மாற்றமடைந்த தலைவர்கள் சமூகங்களை மாற்றியமைக்கிறார்கள்

## இலங்கையில் கிறிஸ்துவுக்கொப்பான தலைவர்களை உருவாக்கும் கொழும்பு இறையியல் கல்லூரியுடன் நீங்களும் கரம் கோர்ப்பீர்களா?

**இலங்கையை பல்தரப்பட்ட மாகாணங்களை சேர்ந்த மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட சில உற்சாகமூட்டும் செய்திகள் இதோ:**



மேல் மாகாணம்

### ஆலோசகத்துறையில் பயிற்சி பெறுபவர் மற்றும் தொழில்முறை ரீதியாக ஒரு உள்ளடக்க எழுத்தாளர்

"இங்கு நான் கற்றுக்கொண்ட அனைத்தும், மக்களுடன் தொழில்முறை ரீதியாக பணியாற்றுவதற்கு ஒரு சிறந்த அடித்தளத்தை வழங்கியது மட்டுமல்லாமல் சிறந்த முறையில் செவிமடுக்கவும், மற்றவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளவும் எனக்கு கற்றுக்கொடுத்தது. இது என்னை ஒரு சிறந்த தோழியாக, வழிகாட்டியாக, மனைவியாக மற்றும் மகளாக தனிப்பட்ட ரீதியில் மெருகேற்றி உள்ளது. இத்திறன்களை என் வாழ்வின் ஆரம்பத்திலேயே கற்றிருக்கக்கூடாதா என்று தோன்றுகிறது!"



வட மாகாணம்

### மேய்ப்பத்துவம் மற்றும் சிறைச்சாலை ஊழியங்களில் ஈடுபடுபவதோடு, தொழில்முறை ரீதியாக சிகையலங்கார நிபுணர்

கொழும்பு இறையியல் கல்லூரியின் பயணமானது என்னை மறுரூபமாக்கியது. இது எனது வேதாகம அறிவை ஆழப்படுத்தியது மட்டுமல்லாமல், எனது ஆன்மீக கண்களையும் திறந்தது. எனது முந்தைய அனுபவங்களை மட்டுமே அடிப்படையாக கொண்டு பிரசங்கிப்பதை கடந்து, முறையாக வேதாகமத்தை தியானிக்கவும், ஆராயவும், பிரசங்கிக்கவும் நான் கற்றுக்கொண்டேன். இந்த ஆய்வுகள் எனது தனிப்பட்ட வளர்ச்சிக்கும் ஊழியத்தின் செயல்திறனுக்கும் பெரிதும் உதவின.



தென் மாகாணம்

### போதகர்

17 வருடங்களாக வலிப்பு நோயினால் (Epilepsy) போராடி, தினமும் காலை, மாலையென இருவேளை மருந்துகளை எடுத்து வந்த நான் அதை நிறுத்தினேன். அதே ஆண்டில் என்னை முழுமையாக இறைப்பணிக்கு அர்ப்பணித்தேன். அதன் பின்னர் கொழும்பு இறையியல் கல்லூரியில் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. பல தடைகள் மற்றும் சவால்களின் மத்தியில் நான் கற்க வேண்டியிருந்தாலும், அந்த காலப்பகுதி எனது வாழ்வின் பொற்காலம் என்றே கூறுவேன். கடவுளின் கிருபை என்னை வழிநடத்தியது.

வட மத்திய மாகாணம்

### வாலிபர் ஊழியத்தில் ஈடுபடுவதோடு, தொழில்முறை ரீதியாக சஞ்சிகை ஆசிரியர்

கடவுளையோ அல்லது கடவுளின் வார்த்தையையோ எளிதில் ஏற்றுக்கொள்ளாத இன்றைய காலத்து வாலிபர்கள் மத்தியில் நான் பணியாற்றுகிறேன். அவர்கள் பெரும்பாலும் சந்தேக கண்ணோட்டம் கொண்டவர்களாகவும், அதிக கேள்விகள் கேட்பவர்களாகவும் இருக்கிறார்கள். கொழும்பு இறையியல் கல்லூரியில் நான் பெற்றுக்கொண்ட ஆழமான கல்வியறிவின் காரணமாகவே, எவ்வித தயக்கமுமின்றி அவர்களது கேள்விகளுக்கு என்னால் தெளிவான பதில்களை வழங்க முடிகிறது.



கிழக்கு மாகாணம்

### ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர் மற்றும் மேய்ப்பத்துவ ஊழியப்பணியாளர்

இங்கு கற்ற ஒவ்வொரு பாடமும் எனது தனிப்பட்ட வாழ்க்கையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. நான் ஏற்றுக்கொண்ட ஊழியத்தை இன்னும் சிறப்பாக செய்வதற்கு கொழும்பு இறையியல் கல்லூரியின் பாடநெறிகள் எனக்கு உதவுகின்றன. குறிப்பாக, எமது ஆசிரியர்கள் பகிர்ந்துகொள்ளும் அவர்களின் சொந்த வாழ்க்கை அனுபவங்கள் எனக்கு ஆறுதலையும், வாழ்வின் அர்த்தத்தையும் புரியவைத்தன. இன்றும் பல சவால்களை சந்திக்கிறோம், ஆனால் அவற்றையெல்லாம் துணிச்சலோடு எதிர்கொள்ளும் தைரியத்தை கொழும்பு இறையியல் கல்லூரியின் பாடங்கள் எனக்கு தந்துள்ளன.

புலமைப்பரிசில் உதவி இல்லையென்றால், எமது கொழும்பு இறையியல் கல்லூரி மாணவர்களில் பெரும்பாலானவர்களால் தமது இறையியல் கல்வியை தொடர முடியாது. இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள விசுவாசிகளின் தாராளமான பங்களிப்பே, இம்மாணவர்களின் கல்வி ரீதியான நிதிச்சுமையை தாங்கி நிற்கின்றன.

**கொழும்பு இறையியல் கல்லூரியின் புலமைப்பரிசில் திட்டத்திற்கு நீங்கள் வழங்குகிற மாதாந்தம் 5,000 ரூபாய் (17 அமெரிக்க டொலர்) அல்லது அதற்கு மேற்பட்ட பங்களிப்பானது, விசுவாசிகளை திறம்பட ஊழியத்திற்காக ஆயத்தப்படுத்தும் பணியை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு உதவும்.**

## நீங்கள் எவ்வாறு பங்களிக்கலாம்?

- **வங்கிப்பரிமாற்றம் மற்றும் வெளிநாட்டு பணப்பரிமாற்றம் (அமெரிக்க டொலர் மற்றும் கனேடிய டொலர்)**
  மேலதிக விபரங்களுக்கு எம்மை தொடர்பு கொள்ளுங்கள்!

- **காசோலை**
  கொழும்பு இறையியல் கல்லூரி என **பெயரிடவும்** (கணக்கிற்கு செலுத்தவும் என குறுக்கு கோடிடவும்)
  அதிபர், கொழும்பு இறையியல் கல்லூரி, 189, துட்டுகெமுனு வீதி, கொஹுவலை, இலங்கை என்ற முகவரிக்கு **அனுப்பி வைக்கவும்.**

மேலதிக விபரங்களுக்கு வள மேம்பாட்டு முகாமையாளர் ரொஷல் ஹேக்கல்-ரணசிங்கவை தொடர்பு கொள்ளவும்.

+94 77 350 2930 | rochelle@cts.lk

www.cts.lk | +94 11 2890809